## மாணவி பலாத்கார கொலை

# உண்மை அறியும் குழு சிட்லிங்கில் கள ஆய்வு



▶ அரூர் சிட்லிங் மாணவி உயிரிழந்த சம்பவத்தில், உயர்மட்ட உண்மை அறியும் கு
சிட்லிங் மலை கிராமத்தில் கள ஆய்வு நடத்தினர்.

**அரூர், நவ.26:** அரூர் சிட்லிங் மாணவி உயிரிழந்த சம்பவத்தில், உயர்மட்ட உண்மை அறியும் குழு, சிட்லிங் மலை கிராமத்தில் கள ஆய்வு மேற்கொண்டது.

அரூர் அருகே சிட்லிங் மலை கிராமத்தில், கடந்த சில நாட்களுக்கு முன் பிளஸ்2 மாணவி, பலாத்காரம் செய்யப்பட்டதில் உயிரிழந்தார். இதில் தொடர்புடைய 2 வாலிபர்களை போலீசார் கைது செய்தனர். இந்த சம்பவம் குறித்து, உயர்மட்ட உண்மையை அறியும் குழுவைச் சேர்ந்த, முன்னாள் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் சாந்தா சின்ஹா தலைமையிலான குழு, கள ஆய்வு மேற்கொள்ள வந்தனர்.

இதில் முன்னாள் யுனிசெப் இயக்குநர் அருணாரத்தினம், ஓய்வு பெற்ற தடயவியல் மருத்துவர் சேவியர் மற்றும் வழக்கறிஞர்கள் மார்ட்டின், கணேசன், ஹாலோசீஸ் ஆகியோர் அடங்கிய குழுவினர், மாணவியின் வீட்டிற்கு சென்று, அவரின் பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் தனி அறையில், நடந்த சம்பவம் குறித்து கேட்டறிந்தனர். பின்னர், சம்பவம் நடைபெற்ற இடத்தி
நேரில் சென்று ஆய்
செய்தனர்.

தொடர்ந்து கோட
டப்பட்டி போலீ
ஸ்டேஷன் மற்றும் அரூ
டிஎஸ்பி, விசாரணை அ
காரி லட்சுமி ஆகியே
ரிடம் சம்பவம் குறித்
கேட்டறிந்தனர். இ
தொடர்ந்து, இன்று (26
தேதி) மாணவி தங்கி
ருந்த தொப்பூர் குழந்
கள் காப்பகம், தர்மபு
அரசு மருத்துவமனையி
மாணவியின் நிலை ம
றும் மாணவிக்கு வழங்க
பட்ட சிகிச்சை முறைக
குறித்து கேட்டறியவுள்
னர்.